**O.S. 100/2018, 08.02.2021, 11.40 am - 12.10 pm**

**வா.சா.1, முனியன், த/பெ.முனிசாமி**

சாட்சி முதல் விசாரணை தொடர்ச்சியாக திரும்ப அழைக்கப்பட்டு பிரமாணம் செய்யப்பட்டு, தொடர்ந்து குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:-**

என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் குறிபபிட்டுள்ள விலாசத்தை நிரூபிக்கும்பொருட்டு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். என்னுடைய வழக்குரையில் நான் சொத்தின் நான்கு பக்க எல்லைகள் குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு குறிப்பிட்டுள்ளதாக கூறுவது தவறான சாட்சியம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆனது நான் தாக்கல் செய்த வழக்கு எண் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் நானும், 1ம் பிரதிவாதியும் தாக்கல் செய்தததது அண்ணன் தம்பி என்ற உறவுமுறையில் என்றால் சரிதான். அந்த வழக்கானது ஒருதலைபட்சமாக பெறப்பட்ட தீர்ப்பு என்றால் சரிதான். அந்த வழக்கின் 1ம் பிரதிவாதி தரப்பினராக இல்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் நத்தம் சர்வே எண்.194-ற்கான வருவாய்துறை ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1ல் உள்ள தீர்ப்பில் செக்குபந்தி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ.1 இந்த வழக்கிற்கு சம்மந்தப்படாத ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல. அ.வ.எண்.79/2004ல் தாக்கல் செய்த மாதிரி வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. என்னுடைய பழைய கதவு எண்.61, புதிய கதவு எண்.101 என்று காண்பிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் குறிப்பிடும் சந்துவழியானது அரசுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அரசுக்கு பாத்தியப்பட்ட சந்துவழியின் சர்வே எண் என்ன என்றால் 194 ஆகும். அரசுக்கு பாத்தியப்பட்ட சந்து என்பதால் அரசாங்கத்தை தரப்பினராக இந்த வழக்கில் சேர்த்துள்ளீர்களா என்றால் சேர்க்கவில்லை. அரசாங்கத்தை தரப்பினராக சேர்ப்பதற்கு தயராக இருக்கிறீர்களா என்றால் இல்லை. அரசு அதிகாரிகளை தரப்பினராக சேர்த்தால் தான் சர்வே எண்.194 ஆனது அரசுக்கு பாத்தியப்பட்டதா அல்லது வாதி கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதா என்று நீதிமன்றத்திற்கு தெரியவரும் என்று சொன்னால் சரியல்ல. அரசை தரப்பினராக சேர்த்தால் வழக்கு எனக்கு எதிராக தீர்ப்பாகிவிடும் என்ற காரணத்தினால் சேர்க்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதியின் இடம் சந்திற்கு எந்த பகுதியில் உள்ளது என்றால் சந்திற்கு தெற்கு பக்கத்தில் உள்ளது, தற்பொழுது அந்த பகுதியை ஆக்கிரமித்து வீடுகட்டி குடியிருந்து வருகிறார். அரசாங்கத்திற்கு பாத்தியப்பட்ட இடத்திலோ அல்லது வேறு யாருடைய இடத்திலோ ஆக்கிரமித்து வீடு கட்டவில்லை என்றும், 1ம் பிரதிவாதியின் பட்டா இடத்தில் தான் வீடு கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல, 5 அடி இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார். நீதிமன்ற ஆணையரை நியமிக்க கோரும் நான் ஏதேனும் மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்தால் நீதிமன்றத்திற்கு உண்மை நிலவரம் தெரியவரும் என்பதால் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் சமயத்திலே அவர் கட்டிடம் கட்டி வசித்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல, வீடு கட்ட தயராக இருந்த சமயத்தில் தான் வழக்கு தொடுத்தோம். சந்து வழி அளவீடுகள் கிரிசமுத்திரம் கிராம ரெவின்யூ ஆவணங்களில்

தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. அ.வ.எண்.79/2004-ன் தீர்ப்பின் படி வருவாய்துறை ஆவணத்தில் ஏதேனும் மாற்றம் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. தீர்ப்பு படி வருவாய் துறையினர் வழக்கு சொத்தை அளவீடு செய்தார்கள் என்பதற்கு எந்த ஆவணமும் தாகக்ல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல தாக்கல் செய்துள்ளேன்.சந்து வழி 8 அடி அகலம் குறித்தும், 95 அடி நீளம் குறித்தும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த சந்து வழியை தவிர வேறு வழி எனக்கு இல்லை என்று சொல்வது தவறு என்றால் சரியல்ல, அந்த வழியை தவிர வேறு வழி இல்லை. 10.11.2017 தேதி கட்டுமான பொருட்களை நிரப்பி அதனை தொடர்ந்து நாட்களில் சுவர் எடுத்து சந்து அடி 3 அடி அகலமாக குறைத்துள்ளார் என்பதற்கு ஏதேனும் புகார் அல்லது வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு அரசாங்கத்திற்கு ஏதேனும் புகார் கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன். 1ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில் தான் கட்டுமான பணிகளை செய்து வந்ததாக கூறியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும் அவரிடத்தில் போட்டு இருந்தால் வழக்கு தொடுத்திருக்க மாட்டோம். வருவாய் துறை ஆவணத்தின் நடவடிக்கை குறித்து அனுப்பபட்ட ஆவணத்தின் நகலை (வா.சா.ஆ.4) தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆனது எனக்கு நகல் வந்ததாகவோ அல்லது கடிதம் வந்ததாகவோ எதுவும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சாட்சி எனக்கு படிக்க தெரியாது என்று கூறிவிட்டார். வா.சா.ஆ.4-ல் என்னுடைய பெயர் எங்கும் குறிப்பிடாமல் மற்றவர்கள் பெயர்கள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சந்து எந்தெந்த இடத்தில் செல்கிறதோ அந்த நபர்கள் பெயர்கள் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் கேடடுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.